செ.வெ.எண்: 680 நாள்: 19.10.2020

**தஞ்சாவூர் மாவட்டம் வண்ணாரப்பேட்டையில் கூடுதலாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்திட மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் உத்தரவு**

தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் செயல்படும் வண்ணாரப்பேட்டை ஊராட்சி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று(19.10.2020) நேரில் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், வண்ணாரப்பேட்டை கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை ஆய்வு செய்து அங்கு போதுமான தார்பாய்கள் உள்ளதா எனக் கேட்டறிந்து மழைக்காலமாக இருப்பதால் கூடுதலாக தார்ப்பாய்களை கையிருப்பில் வைத்துக் கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனடியாக கூடுதல் லாரிகள் மூலமாக சேமிப்பு கிடங்கிற்கு எடுத்து செல்ல அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். நெல் விற்பனை செய்ய வந்த விவசாயிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து விவசாயிகள் கொண்டு வந்த நெல்களின் ஈரப்பதத்தையும் ஆய்வு செய்தார்.

தற்போது நெல் அறுவடைப் பணி நடைபெற்று வண்ணாரப்பேட்டை ஊராட்சி நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு அதிகளவில் நெல் வருவதால், அதிக நெல்களை கொள்முதல் செய்திடும் வகையில் வண்ணாரப்பேட்டையில் கூடுதலாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்திட மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் உத்தரவிட்டார். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி விவசாய பெருங்குடி மக்கள் தங்களுடைய நெல்களை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்று பயனடையுமாறு திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார். இவ்வாய்வின் போது அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.